# Eastern University, Sri Lanka

**First Examination in Bachelor of Business Administration/ First Examination In Bachelor Of Economics - 2010/2011 (Proper/Repeat/Re-Repeat) (Auguest/September/October - 2014)**

**EXB/EXE 1074 Economic Theory**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்- 3 மணித்தியாலம்

01 1.1 பொருளியலில் "அருமை" எனும் பதத்தை எவ்வாறு விளக்குவீர்?

(5 புள்ளிகள்)

1.2 உற்பத்திச் சாத்திய வளையி என்பதால் கருதப்படுவது யாது?

(5 புள்ளிகள்)

1.3 பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை உற்பத்தி சாத்திய வளையியினை பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02 2.1 எல்லைப்பயன் மற்றும் மொத்தப்பயனை பொருத்தமான வரைபடம் மூலம் வேறுபடுத்துக.

(5 புள்ளிகள்)

2.2 பின்வரும் தரவுகளைக் கொண்டு நுகர்வோன் சமநிலையைக் கணிப்பிடுக.

வருமானம் - ரூபா. 204.00

X பொருளுக்கான விலை - ரூபா. 8.00

Y பொருளுக்கான விலை - ரூபா. 6.00

X பொருளுக்கான எல்லைப்பயன்- $MUx = 184-8x$

Y பொருளுக்கான எல்லைப்பயன்- $MUy = 90-6y$

(7 புள்ளிகள்)

2.3 எல்லைப் பயன் கோட்பாட்டில் இருந்து எவ்வாறு கேள்விக் கோட்டைப் பெறலாம் என்பதைக் காட்டுக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03 3.1 நிறைபோட்டிச் சந்தையை தனியுரிமைச் சந்தை அமைப்பிலிருந்து வேறுபடுத்துக.

(8 புள்ளிகள்)

3.2 குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04 4.1 தேசிய வருமானக் கணிப்பீட்டின் நோக்கங்களைக் குறிப்பிட்டு ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் அதன் பங்களிப்பினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

4.2 மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் வருமான வட்டப் பாய்ச்சல் மாதிரியினை வரைந்து அவற்றின் பிரதான எடுகோள்களை வரையறை செய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05 5.1 நவீன பொருளாதாரமொன்றில் பணத்தின் தொழிற்பாடுகளை விளக்குக.

(8 புள்ளிகள்)

5.1 வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பேணல் மற்றும் இலாபத்தன்மை என்னும் இரண்டு முரண்பட்ட இலக்குகளுக்கிடையே வணிக வங்கிகள் ஆற்றும் பணிகளை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)